01-02.qxd 19/08/2008 17:53 Page 1

Lifeline

மீண்டும் வாழ்வோம்

இடம்பெயர்ந்த மக்களுக்கான மனிதாபிமான தகவல் பரிமாற்றம்

Humanitarian Information For IDPs

Vol 1 - No 27 Pages 4 Sunday, 24 August 2008 Free Copy

இடம்பெயர்வுகளும் இழப்புக்களும்

கடந்த 2006இல் ஏற்பட்ட உள்நாட்டு யுத்த சூழ்நிலை காரணமாக இடம் பெயர்ந்து திருகோணமலை மாவட்டத்தின் ஆலங்கேணி முகாமில் வசித்து வந்த அதே மாவட்டத்தின் இறால்குழி பிரதேச மக்கள் மீண்டும் சில மாதங்களுக்கு முன்னர் அவர்களது சொந்த இடங்களில் குடியேற்றப்பட்டுள்ளனர்.

இருள் சூழ்ந்த ஒரு மாலைப்பொழுதில் வீட்டுக்கு முன்பாக இருந்த சிறிய இடத்தில் குடும்ப அங்கத்தவர்கள் அமர்ந்து சந்தோஷமாக அளவளாவிக்கொண்டிருந்தனர். தகரத்தால் மறைக்கப்பட்ட சிறிய கொட்டில் போன்ற வீடு என்றபோதிலும் கூட அவர்கள் ஒவ்வொருவர் முகத்திலும் தெரிந்த நிறைவு சொந்த இடத்தில் வாழ்வதின் சந்தோஷத்தை பறைசாற்றியது.

ஒரு வருட முகாம் வாழ்க்கையின் பின்னர் தனது சொந்த இடமான இறால் குழிக்கே மீண்டும் திரும்பிய திருமதி மகேஸ்வரன் விக்னேஸ்வரி கூறுகையில், இடம்பெயர்ந்த இடங்களில் எத்தகைய பொருட்களை வழங்கிளாலும் எமது சொந்த இடங்களில் வாழ்வது போன்ற நிறைவு எமக்குத் தோன்றாது என்றார்.

மகேஸ்வரன் விக்னேஸ்வரி

கடந்த 2006 இல் ஏற்பட்ட அசாதாரண சூழல் காரணமாக நாவலடி, இறால் குழி பைச்சேர்ந்த 215 குடும்பங்கள் இடம் பெயர்ந்து திருகோணமலை ஆலங்கேணி முகாமில் வசித்துவந்தன. தற்போது 160 குடும்பங்களே திரும்பி வந்துள்ளன. பலர் இந்தியாவில் தஞ்சம் புகுந்துள்ள அதே நேரம் இன்னும் சிலர் முகாம்களிலேயே வசிக்கின்றனர்.

'இடம்பெயர்ந்து செல்லும்முன்னர் எங்களிடம் அனைத்து வளங்களும் இருந்தது. திரும்பி வரும்போது எதுவும் இல்லை. இல்லை என்ற சொல்லை மட்டும்தான் கூறக் கூடியதாக இருக்கின்றது. எமது காணி யில் இருந்த தென்னைமரங்கள் கூட இல்லை' என்று வரதராஜ் கதாஜினி கூறினார்.

இடம்பெயர்ந்து சில மாதங்களிலேயே மறுபடியும் சொந்த இடத்திற்கு குடிவருமாறு அரச அமைப்பு விடுத்தபோதிலும் பாதுகாப்பு பிரச்சினைகள் காரணமாக திரும்பிவர மக்கள் மறுத்துவிட்டனர். இடம் பெயருமுன்னான தொழில்வாய்ப்புகள் பற்றி கைலைநாதன் கூறுகையில், தற்போது தொழில் வாய்ப்பு நூற்றுக்கு தொண்ணூறு வீதம் குறைவடைந்த நிலையிலேயே காணப்படுவதாகவும் 10 ரூபா சம்பாதிப்பது கூட கஷ்டமாகியிருக்கிறது என்றும் தெரிவித்தார்.

வளமான வாழ்க்கையை வாழ்ந்த இந்த மக்களின் தற்போதைய நிலை கவலைக்குரியது. எதுவிதமான பாதுகாப்பு பிரச்சினைகளும் காணப்படாவிட்டாலும் தொழிலின்மை தவிர்க்க முடியாத பிரச்சினை என்கிறார் தையல் தொழில் செய்து வருமானத்தை தேடிக்கொள்ளும் திருமதி வரதராஜ் கதாஜினி. அவர் மேலும் தெரிவிக்கையில் எங்கள் ஊரின் வாழ்வாதாரம் காட்டை நம்பியே உள்ளது. கடலுக்கு செல்வதானாலும் கட்டுப்பாடுகள் உண்டு. தோட்டம் செய்கின்றவர்கள் மகாவலி கங்கைக்குச் செல்ல வேண்டும். விறகெடுப்பதற்குக் கூட காட்டிற்குச் செல்ல எமக்கு அனுமதியில்லை என்றார்.

சம்பூர், கட்டைப்பறிச்சான் உட்பட பல பிரதேசங்களிலிருந்து இடம்பெயர்ந்து மட்டக்களப்பு முகாம்களில் வாழும் மக்களை

கைலைநாதன்

யும் இறால்குழியில் குடியேற்ற அரக திட்டமிட்டுள்ளது. அதற்கு அந்த மக்கள் மறுப்பு தெரிவித்துள்ளனர். மற்றவர்களையும் அங்கு குடியமர்த்தினால் வேலைவாய்ப்பு குறைவடையும் என்று கைலைநாதன் கருத்துத் தெரிவித்தார்.

இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் ஒவ்வொருவரும் தமது சொந்த இடங்களுக்கு செல்லவேண்டுமென்றே விரும்புகின்றனர். ஆனால் அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்வதற்கு தேவையான வசதிவாய்ப்புக்கள் அந்த இடங்களில் உள்ளனவா? என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியானது சூரியன் எப்.எம். வானொலி ஊடாக ஒலிக்கிறமைகளில் காலை 6.00 முதல் 8.00மணி வரையும் கிழக்கு மாகாணத்தில் பிறை எப்.எம். வானொலி ஊடாக (FM 102 MHz) ஒளிபரப்புக்கிறமைகளில் பி.ப.1.30மணி முதல் 2.00மணி வரையும் புத்தளம் பிரதேசத்தில் அதர் எப்.எம். ஊடாக ஒளிபரப்புக்கிறமைகளில் மாலை 6.45 முதல் 7.15 மணி வரையும் எமது நிகழ்ச்சி ஒலிபரப்புகின்றன www.radio.voicesofpeace.lk என்ற இணையத் தளத்திலும் கேட்கலாம்.

சுவடுகள்

✱ அரசாங்க அதிபர்களின் தகவல்களின் அடிப்படையில் திரட்டப்பட்ட IASC 139ஆவது அறிக்கையின் படி இலங்கையில் 57,573 குடும்பங்களைச் சேர்ந்த 216,687 பேர் அகதிகளாக இடம் பெயர்ந்த நிலையில் உள்ளனர்.

✱ 13.08.2008 அன்று வவுனியா பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் மீண்டும் ஒரு தீ விபத்து ஏற்பட்டுள்ளது. இந்த தீ விபத்து காரணமாக 12 மண்டபங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. 70 குடும்பங்களைச் சேர்ந்த 250 பேர் பாதிக்கப்பட்டிருப்பதாக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் சின்னத்தம்பி சன்முகம் தெரிவித்திருக்கின்றார். புதன்கிழமை ஏற்பட்ட தீ விபத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக அரச செயலகத்தினால் சமைத்த உணவு வழங்கப்பட்டிருக்கின்றது.

✱ யாழ்குடா நாட்டில் விதவைகளுக்கான திட்டம் ஒன்றினை HUDEC நிறுவனம் கனேடிய அரசின் நிதியுதவியுடன் முன்னெடுத்துள்ளது. 10 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு இதற்கென யாழ்பாணத்திற்கு அனுப்பிவைக்கப்பட் டுள்ளது. 6 பிரதேச செயலகப் பிரிவுகளிலிருந்தே தெரிவு செய்யப்பட்ட 230 விதவைகளைத் தலைவர்களாகக் கொண்ட குடும்பங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. தலா ரூபா 20,000 முதல் 70,000 பெறு மதியான திட்ட மதிப்பீட்டின் கீழ் இவர்களுக்கான சயதொழில் முயற்சிக்கான உதவிகள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றது.

✱ மட்டக்களப்பில் மீள்குடியேற்ற பகுதிகளில் அழிவடைந்த தோட்டங்களை மீள அமைப்பதற்காக பல்லாண்டுப் பயிர்களான தென்னை, மா, பலாக்கன்றுகளை இலவசமாக விநியோகித்து வீட்டுத் தோட்டம் செய்து தமது குடும்ப வருமானத்தை அதிகரிக்கும் திட்டத்தை ஐப்பானிய அரசின் நிதியுதவியுடன் சேவாலங்கா மன்றம் அமுல்படுத்திவிருக்கின்றது.

வெங்கள் எண்ணங்களை உங்கள் மனதிலிருந்து கொள்ளுங்கள்

மீண்டும் வாழ்வோம் தொடர்பான உங்கள் மேலான எண்ணங்களையும் உங்கள் மனப் பிரதிபலிப்பையும் வெளிப்படுத்தி அனுப்பிவைக்கவும். அவைகளை மீண்டும் வாழ்வோம் பகுதியில் பிரசுரிக்கவுமிருக்கின்றோம்.

த.பெ.இல. 1039 கொழும்பு

தொ.பே.இல: 077 4952242

மின்அஞ்சல்: info@lifelinesrilanka.com

பேசும் படம்

உள்நாட்டு யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்து கடந்த 25 வருடங்களாக விகாரைகளிலும் பொது இடங்களிலும் வசித்து வந்த திருகோணமலை சுமேதங்கர புரவைச்சேர்ந்த 75 சிங்கள குடும்பங்கள் மீண்டும் அவர்களது சொந்த இடங்களிலேயே குடியேற்றப்பட்டுள்ளனர். மிகவும் வறுமையினால் வாடும் அந்த மக்களுக்கு இண்டர்நியூஸ் நிறுவனம் வானொலிப் பெட்டிகளை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

மீண்டும் வாழ்வோம்

'மீண்டும் வாழ்வோம்' திட்டமானது இலங்கையின் அசாதாரண சூழ்நிலைகளினால் இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்களுக்காகவும் மீள்குடியேறி உள்ளவர்களுக்காகவும், தகவல்களை வழங்கும் பரந்துபட்ட மனிதாபிமான செயற்றிட்ட அமைப்புக்களின் ஓர் அங்கமாகும்.

கடலலை அள்ளிச் சென்ற உறவுகள்

களாமி பேரலைத்தாக்கத்தினால் தனது குடும்பத்தினர் அனைவரையும் இழந்துள்ள திரு தம்பிராசா மகேஸ்வரன், அவர்களுக்காக நினைவாலயம் ஒன்றை தனது கிராமத்தில் அமைத்துள்ளார். மட்டக்களப்பின் நாவலடி கிராமத்தைச் சேர்ந்த அவர், கடந்த 2004 இல் தனது மனைவி, நான்கு பிள்ளைகள், மாமா, மாமி, மைத்துனி மற்றும் ஏனைய உறவுகள் என 75 பேரை இழந்துள்ளார். உறவுகளை இழந்து 3 ஆண்டுகள் கடந்த பின்னரும் கூட மீளாத்துயரில் அவர்களின் நினைவுகளுடனேயே வாழும் மகேஸ்வரன் தனது ஏக்கத்தை மீண்டும் வாழ்வோம் குழுவினருடன் பகிர்ந்துக்கொண்டார்.

'பிறப்பு வளர்ப்பு எல்லாம் இந்த நாவலடி கிராமத்தில் தான். பரம்பரையாக நாங்கள் இங்குதான் வாழ்ந்து வருகின்றோம். கலரைலை வாடி நடத்தி வந்தோம். மாமா, மாமி, மச்சான், என்னுடைய நான்கு பிள்ளைகள் அனைவரும் களாமியில் இறந்துவிட்டார்கள். மருமகள்மார் அவர்களுடைய பிள்ளைகள் என்று எங்களுடைய சொந்தங்கள் மட்டுமே 75 பேர் வரை இறந்துவிட்டார்கள். இரண்டு மாதங்களின் பின் நாம் தற்கொலை செய்து இறந்துவிடுவோமா என்று சிந்தித்தேன். என்னைப் பார்ப்பதற்கு மனைவி மக்களோ உறவினர்களோ இல்லை. பின்னர் அவர்களுக்காக நினைவாலயம் கட்ட வேண்டும் என்று நினைத்தேன். நான் கடலுடன வணங்குவதோ கோவிலுக்குப் போவதோ இல்லை. அவர்களைத்தான் தெய்வமாக நினைத்து வழிபட்டு வருகிறேன். நான்கு இலட்சம் ரூபாய் செலவளித்து என்னுடைய சொந்தப் பணத்தின் மூலமும் என்னுடைய மனைவியின் பணத்தைக் கொண்டும் இந்த நினைவாலயத்தை அமைத்தேன்.

நாவலடி கிராமத்தை சேர்ந்த தம்பிராசா மகேஸ்வரன்

எங்களுடைய வீடு களாமியில் முழுவதுமாக அழிந்துவிட்டது. அதனால் EHED நிறுவனம் எனக்கு வீடு கட்டித் தந்து உதவியது. எனக்குப் பிறகு யாரும் இல்லை. அதனால் இந்த வீட்டில் நானும் என் மைத்துனரும் வசித்து வருகின்றோம். நான் கோவிலுக்குத் தேவையான நிதி உதவிகளைச் செய்வதுண்டு ஆனால் கடவுளைக் கும்பிட விருப்புவதில்லை. என்னுடைய மனைவி பிள்ளைகள் உறவினர்கள் அனைவரும் கோவில் பணிகளை அதிகமாக செய்து வந்தார்கள். என்னுடைய மூத்த மகன் கோவில் வேலைகளை செய்யும்போது மின்சாரம் தாக்கி கோவிலுக்குள் ஒரு நாள் விழுந்து கிடந்தார். அந்தளவிற்கு பக்தியாக இருந்தவர்களை கடவுள் காப்பாற்றவில்லை.

தேன்கூட்டைக் கல்லால் எறிந்து கலைத்ததுபோல் நாவலடி கிராமம் கலைந்து விட்டது. 85 குடும்பம் மட்டும்தான் மிஞ்சியது. தற்போது அவர்களில் சிலர்தான் நாவலடி கிராமத்தில் இருந்து வருகின்றார்கள். என்னால் தற்கொலை செய்துகொள்ள முடியவில்லை. கடவுள் எனக்கு விரைவில் இறப்பைத் தரவேண்டும் என்றுதான் தினமும் பிரார்த்தித்துக் கொண்டு இருக்கின்றேன். வாழ்வதற்கே எனக்கு விருப்பம் இல்லை.'

வாழ விரும்பாத நிலையிலும்கூட இழந்த தன் குடும்பத்தினரின் நினைவுகளை சுமந்தபடி வாழ்ந்துகொண்டிருக்கும் தம்பிராசா மகேஸ்வரனைப்போல் இன்னும் எத்தனையோ பேர் எம்மிடையே வாழ்ந்துகொண்டிருப்பது உண்மையே. அமைதியான கடல் ஒரு சில மணிநேரம் கரையைத் தான்டியதில் எத்தனை கல்லறைகள் உருவாகின்ன? எத்தனை பேர் நடைப்பிணமாகினர்?

சாளரம்

திருகோணமலை நகர் இலங்கையில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் ஒன்று. கடந்த காலங்களில் இருந்த பேருந்து நிலையம் போதிய வசதிகளைக் கொண்டதாகக் காணப்படாமையினால் பயணிகள் அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்க வேண்டியிருந்தது. இவ்விடயத்தைக் கருத்திற்கொண்டு USAID அமைப்பு தனது நிதி உதவியுடனும் நகர சபையினதும் அரசின் ஒத்துழைப்புடனும் திருகோணமலை நகரில் கல வசதிகளையும் கொண்ட ஒரு பேருந்து தரிப்பிடத்தை அமைத்து அதனை உதியோய பூர்வமாக மக்களின் பாவனைக்காக 11ஆம் திகதி திறந்துவைத்தது.

இப்புதிய பேருந்து நிலையமானது எதிர்காலங்களில் எவ்வாறான மாற்றத்தை வியாபாரத்தில் ஏற்படுத்தும் எனவும் இதனால் இனங்களுக்கிடையிலான நல்லுறவு எப்படி அமையும் என்வும் பொதுமக்களில் சிலரை சந்தித்து வினவியபோது அவர்கள் தந்த பதில்கள் இங்கே தரப்படுகிறன.

நபர் 1: தற்போது எம்முடைய வியாபாரம் சரிவர நடப்பதில்லை. இந்த பேருந்து நிலையம் திறக்கப்பட்ட பின்னர் வியாபாரத்தில் இலாபம் கிடைக்கும் என்று நம்புகின்றோம். மக்களும் கொள்வனவு செய்ய அதிக எண்ணிக்கையில் வருவார்கள். மூன்று இன மக்களும் இருப்பதால் ஏதேனும் மாற்றம் நிகழும் என்று எதிர்பார்க்கின்றோம்.

நபர் 2: திருகோணமலை மாவட்டத்திற்கு இந்த பேருந்து நிலையம் மிகவும் பெறுமதியான ஒன்றாகக் கருதுகின்றேன். இந்த மாதிரியான பேருந்து நிலையம் நாட்டில் வேறெங்கும் இருப்பதாக நான் நினைக்கவில்லை. பேருந்து நிலையம் திறந்த பின்னர் அனைத்து பகுதிகளிலும் இருந்து இங்கு மக்கள் வருவார்கள். இதனால் முச்சக்கரவண்டி ஓட்டுநர்களுக்கும் வியாபாரிகளுக்கும் நல்ல வருமானம் கிடைக்கும். பேருந்து நிலையம் ஒன்று இல்லாத காரணத்தால் இதுநாள் வரை எம்முடைய மக்கள் மிகவும் சிரமப்பட்டார்கள். இங்கு மூவின மக்களும் ஒன்றாக வாழ்ந்தாலும் எம்மிடையே பெரிய அளவில் பிரச்சினைகள் எதுவும் தோன்றுவதில்லை.

நபர் 3: மக்களின் சிரமங்கள் தற்போது குறைந்துள்ளன. வியாபார நடவடிக்கைகள் சூடுபிடிக்கும். எல்லோரும் ஒன்றாகக்கூடும் இடம் பேருந்து நிலையம்தான். இதனால் மக்களிடையே நல்லுறவு பேணப்படும்.

நபர் 4: தரிப்பிடங்கள் அங்கும் இங்குமாக பிரிந்திருந்ததன் காரணமாக தொழில்கள் பாதிப்படைந்திருந்தது. இனிமேல் அந்த நிலை சீராகும் என்று நினைக்கின்றேன். நல்லதொரு சூழல் உருவாகியுள்ளது. இன ஐக்கியம் ஏற்படவும் வாய்ப்புள்ளது. மக்கள் தற்போது கடுமையான சூழலில் வாழ்ந்து வருகின்றார்கள்.

வாழ்வின் வர்ணங்கள்

இடப்பெயர்வுகளும் முகாம் வாழ்க்கையும் பிள்ளைகளின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கியுள்ளதைப்போன்றே வளரும் பிராயத்தில் அவர்களது இனிமையான குடும்ப சூழலையும் இல்லாமல் செய்துள்ளது. ஓமந்தை விளக்குவச்ச புரத்தைச்சேர்ந்த 17 வயதான சிவலிங்கம் டரூஷன் இது வரை 9 இடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளார். தற்போது வவுனியா சங்கராபுரத்தில் குடியேற்றப்பட்டுள்ளமை உறுதி மாறாத டரூஷனின் கனவுகளை இன்று வாழ்வின் வர்ணங்களாக கேட்கலாம்.

எமது குடும்பங்களில் எத்தகைய பிரச்சினைகள் இருந்தாலும் எம்முடைய கல்வியை நாம் தொடர வேண்டும். அப்போதுதான் எம்முடைய குடும்பத்தினரையும் சமூதாயத்தையும் நல்லதொரு நிலைமைக்குக் கொண்டுவர முடியும். எமக்கான கதந்திரம் இல்லை என்ற ஒரே காரணத்திற்காக எம்முடைய கல்வியை நாம் இடைநிறுத்தக் கூடாது. அதே நேரம் எம்முடைய உரிமைகளையும் விட்டுக்கொடுக்கக் கூடாது. எம் நாட்டு பிரஜைகள் எவருமே நாம் குறைந்தவராக மாறிவிடக்கூடாது. பெரியவர்களின் காலம் கடந்துவிட்டது. எனவே சிறுவர்களையாவது தரமுள்ள நல்ல பிரஜைகளாக மாற்ற வேண்டும்.

01-02.qxd 19/08/2008 17:53 Page 2

வன்னியில் மனித அவலத்தை தருக்கும் முன்னெடுப்புகள்

ஐக்கிய நாடுகள் சபையின் பிந்திய கள அறிக்கையின்படி மன்னார் மாவட்டத்தில் வடமேற்குப் பகுதியில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் மோதல்கள் காரணமாக ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்துள்ளதாக தெரியவருகின்றது. இந்த பிரதேச மக்கள் கடந்த ஜூன் மற்றும் ஜூலை மாத காலப்பகுதியில் தமது வாழ்விடங்களைவிட்டு வெளியேறி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏறத்தாழ 12,000 குடும்பங்கள் வடக்கு நோக்கி கிளிநொச்சி நகரத்தை அண்மித்து அரச கட்டுப்பாட்டற்ற பிரதேசங்களை நோக்கி சென்றிருப்பதாக ஐக்கிய நாடுகள் சபையின் பேச்சாளர் கோடன் வெய்ஸ் IRIN இணையத்திற்குத் தெரிவித்துள்ளார்.

தற்போது இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கான மனிதாபிமான பணிகளை மேற்கொள்ளக் கூடிய நிலை காணப்படுகின்றது எனவும் அவர் அச்சம் வெளியிட்டுள்ளார்

அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இல்லாத வன்னிப் பகுதிக்குள் புதிதாக இடம்பெயர்ந்துள்ள மக்களுடன் சேர்த்து ஏறத்தாழ 145,000 இடம்பெயர்ந்த மக்கள் வாழ்வதாகவும் இந்த மக்களுக்கான உதவிகளை அதிகரிப்பதற்கு உலக உணவுத் திட்டம் முனைப்புகளை மேற் கொண்டுள்ளதாகவும் வெய்ஸ் தெரிவித்து துள்ளார்.

இம்மாதம் 4ம் திகதி வெளியிடப்பட்ட ICRC அறிக்கையின்படி உலக உணவுத் திட்டமானது 130 மெட்ரிக் தொன் பருப் பினையும் 10 மெட்ரிக் தொன் மரக்கறி என்னெயையும் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு பகுதிக்கு வவுனியா ஊடாக கொண்டு சென்றுள்ளது. இந்த உணவுப் பொருட்கள் உலக உணவுத் திட்டம் வன்னியில் மேற்கொண்டுள்ள உலர் உணவு விநியோக திட்டத்தின் மூலம் இடம்பெயர் மக்களுக்கு விநியோகிக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

புகைப்படம் : நன்றி IRIN இணையத்தளம்

மோதல்கள் இடம்பெறும் பகுதிகளில் இருந்து மக்கள் கட்டுப்பாடற்ற பகுதிகளை நோக்கி இடம்பெயர்வதற் குரிய காரணங்களை கண்டறிய முடியாதிருப்பதாகவும் அவர்கள் எதிர்காலத்தில் அரசாங்க கட்டுப்பாட்டு பகுதிகளுக்கு திரும்புவார்களா என்ற சந்தேகம் எழுந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை புதிதாக மன்னார் மாவட்டத்தின் வடக்கு பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்துள்ள கடுதலான மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுவதால் இடம் பெயரும் மக்கள் மேலும் அசௌகரியங்களை எதிர் நோக்க நேரிடும் என்று உதவி அமைப்புகள் கட்டிக்காட்டியுள்ளன

அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் மக்கள் செல்ல வேண்டுமானால் அவர்கள் ஓமந்தை சோதனைச் சாவடியூடாகவே செல்லவேண்டியுள்ளது.

தற்போது ஓமந்தை சாவடி பிரச்சினைகளினிற்றி செயல்பட்டு வருவதாகவும் மக்கள் அதன் வழியாகத் தடையின்றி அரசாங்க கட்டுப்பாட்டு பகுதிகளுக்குள் செல்ல முடியும் என்றும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார IRIN இணையத்திற்கு தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் பாதிப்புகளுக்கு முகம் கொடுத்து வரும் இரு மாவட்டங்களிலும் புதிதாக இடம் பெயரும் மக்களின் மனிதாபிமான பணிகளை மேற் கொள்ளவதற்கு 2 மில்லியன் ரூபாவினை ஒதுக்கியுள்ளது.

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களின் தென்மேற்கு பகுதியிலிருந்து ஏறத்தாழ 800 பேர் வரை அரசாங்க கட்டுப்பாட்டு பகுதிகளுக்கு வந்துள்ளதாக வெய்ஸ் தெரிவித்துள்ளார். முன்னரங்க நிலைகளில் தொடர்ச்சியாக புதற்ற நிலை காணப்படுவதால் அரசாங்க கட்டுப்பாட்டு பகுதிகளுக்குள் வந்துள்ள மக்களின் சரியான தொகையினை கணிப்பிட முடியா திருப்பதாக ஐ.நா.வின் பேச்சாளர் வெயிஸ் தெரிவித் துள்ளார்.

மோதல்கள் இடம் பெறும் பகுதிகளில் இருந்து மக்கள் கட்டுப்பாடற்ற பகுதிகளை நோக்கி இடம்பெயர்வதற் குரிய காரணங்களை கண்டறிய முடியாதிருப்பதாகவும் அவர்கள் எதிர்காலத்தில் அரசாங்க கட்டுப்பாட்டு பகுதிகளுக்கு திரும்புவார்களா என்ற சந்தேகம் எழுந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

புகைப்படம் : நன்றி IRIN இணையத்தளம்

இடம்பெயர்வுகள் தொடர்கதையாய் மாறியுள்ள நிலையில் மக்களுக்கான மனிதாபிமான பணிகள் இடையூறின்றி தொடர வேண்டும் என்பதே அனைவரின தும் அவா.

இடம்பெயர்ந்துள்ள மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்புவதற்கு ஏற்பாடுகளை செய்து கொடுக்க இயலுமானால் அவர்களுக்கான விநியோக நடவடிக்கைகளை மேற்கொள்வது எளிதாக அமையும். அடுத்த இரண்டு மாதங்களுக்குள் வன்னிப் பகுதிகளில் கடுதலான மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுவதால் இடம் பெயரும் மக்கள் மேலும் அசௌகரியங்களை எதிர் நோக்க நேரிடும் என்று உதவி அமைப்புகள் கட்டிக்காட்டியுள்ளன

அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் மக்கள் செல்ல வேண்டுமானால் அவர்கள் ஓமந்தை சோதனைச் சாவடியூடாகவே செல்லவேண்டியுள்ளது.

தற்போது ஓமந்தை சாவடி பிரச்சினைகளினிற்றி செயல்பட்டு வருவதாகவும் மக்கள் அதன் வழியாகத் தடையின்றி அரசாங்க கட்டுப்பாட்டு பகுதிகளுக்குள் செல்ல முடியும் என்றும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார IRIN இணையத்திற்கு தெரிவித்துள்ளார்.

தகவல் பெட்டி

உங்களுக்குத் தெரியுமா?

ஒருவர் இருமுறை திருமணம் செய்வது சட்டப்படி தவறானது. கலாசார ரீதியில் ஒருவர் திருமணம் செய்து பின்பு அவர் வேறு ஒருவரை சட்டப்படி திருமணம் செய்வது குற்றமாகக் கருதப்படுகிறது. அப்படியான நிகழ்வுகள் ஏற்படும்பட்சத் தில் நீங்கள் என்ன செய்யலாம் என்பது தொடர்பில் நோ்வே அகதிகள் பேரவையின் சட்ட அதிகாரி தரும் விளக்கம் இதோ. 'முதலாவது திருமணம் கலாசார ரீதி யான திருமணமாகவும் இரண்டாவது திருமணம் பதிவு செய்யப்பட்ட திருமணமாகவும் இருக்குமாயின் உண்மையில் நடைமுறையில் சிக்கல்கள் தோன்றும். இருப்பினும் இரண்டாவதாக செய்யப்பட்ட திருமணம் வலிதற்ற திருமணம் என்று கூறி விட முடியாது. முதலாவது திருமணத்தில் விவாகரத்துப் பெறாத நிலையில் இரண்டாவது திருமணத்தை செய்து கொள்வது ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு விடயம். இந் நிலையில் முதலாவது தாரத்திற்குப் பிறந்த குழந்தைகளோ முதலாவது தாரமோ அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்து பராமரிப்புப் பணத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.

திருமண அத்தாட்சிப் பத்திரம் மிக முக்கியமான பத்திரமாகக் கருதப்படுகிறது. ஒருவர் திருமணம் செய்துள்ளதை உறுதிப்படுத்துவதற்கும், குழந்தை ஒன்று பிறக்கும் பொழுது பெற்றோர்கள் திருமணம் புரிந்துள்ளார்களா எனும் கேள்வியை உறுதிப்படுத்துவதற்கும் வாழ்க்கைத் துணை ஒருவர் இறக்கும் பட்சத்தில் அவர் தொடர்பான வங்கி ரீதியான கொடுக்கல் வாங்கல்கள், அடகு, மற்றும் ஏனைய நிதி ரீதியான பரிமாற்றங்களுக்கும் திருமண அத்தாட்சிப் பத்திரம் அவசியமாகிறது. திருமண அத்தாட்சிப் பத்திரம் தொடர்பில் உங்களுக்கு உதவி தேவைப்படின் உங்கள் பிரதேசங்களில் உள்ள நோர்வே அகதிகள் பேரவையுடன் தொடர்புகொள்ளுங்கள்.

தொடர்ச்சியான இடப்பெயர்வுகளால் அல்லலுறும் முல்லை மக்கள்

முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது இடம்பெற்றுவரும் யுத்த சூழ்நிலை காரணமாக 11,891 குடும்பங்கள் இடம் பெயர்ந்த நிலையில் உள்ளனர். இடம்பெயர்வுகளினால் பல்வேறு சிக்கல்களுக்கு மத்தியில் வாழ்ந்து வரும் மக்களின் தற்போதைய நிலை குறித்து அறிந்து கொள்ளும் நோக்கில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் எமில்டா சுகுமாருடன் தொடர்பு கொண்டு மாவட்டத்தின் தற் போதைய நிலை குறித்து கேட்டறிந்தோம். துணுக்காய், மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவுகளிலிருந்து மக்கள் ஒட்டிகட்டான், புதுக் குடியிருப்பு, கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களை நோக்கி இடம்பெயர்ந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கமார் 11,891 குடும்பங்களைச் சேர்ந்த 47,494 பேர் தற்போது இடம்பெயர்ந்துள்ளார்கள். இவர்களில் முல்லைத்தீவை நிரந்தர இருப்பிடமாகக் கொண்ட 4,696 குடும்பங்களைச் சேர்ந்த 16,859 பேரும் ஏனைய மாவட்டங்களிலிருந்து வந்த 7,195 குடும்பங்களைச் சேர்ந்த 30,635 பேரும் ஏற்களவே அந்த இரண்டு பிரதேசங்களிலும் வாழ்ந்து வந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்கள் அனைவருமே தற்போது இடம்பெயர்ந்த நிலையில் வேறு இடங்களுக்கு சென்றிருக்கின்றார்கள். அம்மக்களுக்கான அத்தியாவசிய உணவுப் பொருட்களை உலக உணவுத் திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டு வருகின்றது. இடம்பெயர்ந்த மக்களுக்கான குடிநீர் மற்றும் சுகாதார வசதிகளைக் கவனிப்படுகற்கு அரசாங்கம் மீள்குடியேற்ற அமைச்சினூடாக நிதி உதவியளித் துள்ளதாக அரசாங்க அதிபர் தெரிவித்தார். அந்த மக்களுக்கான தற்காலிக வதிவிடங்களை அமைத்துக் கொடுக்குமாறு அரசாங்கப்றற நிறுவனங்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.எனினும் அரச சார்பற்ற நிறுவனங்கள் தங்களுடைய செயற்பாடுகளை விரைவாக முன்னெடுக்க முடியாத நிலையே அங்கு காணப்படுவதாகவும் அரச அதிபர் குறிப்பிட்டார்.

வன்னிப் பகுதியில் திடீரும் இடம்பெயர்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன மோதல்கள் ஏற்படும்போது மக்கள் ஒரு கிராமத்தை விட்டு அடுத்த கிராமத்திற்கு இடம்பெயர்கின்றனர். பின்னர் அங்கிருந்து மீண்டும் ஒரு கிராமத்திற்கு அவர்கள் செல்ல வேண்டிய நிலை ஏற்படுகின்றது இதன் காணரமாக அவர்களுக்கு எங்கு தற்காலிக இருப்பிடங்களை அமைப்பது என்ற இக்கட்டான நிலைக்கு அரசசார்பற்ற நிறுவனங்கள் தள்ளப்பட்டுள்ளன.

இந்நிலையில் இடம்பெயரும் மக்களுக்கு தேவையான அத்தியாவசிய உணவுப் பொருட்களை

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் எமில்டா சுகுமார்

வழங்குமாறு அரசாங்க அதிபரால் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு அமைவாக அரச சார்பற்ற நிறுவனங்கள் தங்களால் இயன்ற அளவு வினைத்திறனுடன் மனிதாபிமான பணிகளை முல்லைத்தீவு மாவட்டத்தில் மேற் கொண்டு வருகின்றன.

தற்போதைய அசாதாரண சூழ்நிலைகளால் அரசாங்கத் தினைக்களங்களும் வைத்தியசாலைகளும் கூட இடம்பெயரும் நிலைக்கு தள்ளப்படுவதால் இடம் பெயர்ந்திருக்கின்ற மக்களை தற்காலிகமாக வேறு இடங்களுக்கு மாற்றுகின்ற போது அவர்களுக்கான மருத்துவ வசதிகளையோ ஏனைய சுகாதார வசதிகளோ வழங்க முடியாதுள்ளதாக அரசாங்க அதிபர் எமில்டா சுகுமார் தெரிவித்தார்.

இதேவேளை நடமாடும் வைத்திய சேவைகளை மக்கள் தற்காலிகமாக வாழ்கின்ற இடங்களுக்குச் சென்று வழங்குவதிலும் பாரிய நெருக்கடிகள் நிலவுவதாக தெரிவிக்கப்படுகின்றது. எரிபொருள் பற்றாக்குறை நிலவுவதால் வாகனங்கள் மூலம் பயணங்களை மேற்கொண்டு இடம்பெயரும் மக்களுக்கான அத்தியாவசிய உதவிகளை வழங்குவது சிரமமானதாக மாறியுள்ளது.

கல்வி பொதுத் தாரதர உயர்தரப் பரீட்சைகள் நடைபெற்றுக் கொண்டிருகுகும் தற்போதைய நிலையில் அடிக்கடி ஏற்படும் இடம்பெயர்வுகளால் மாணவர்களது கற்றல் செயல்பாடுகளும் பாதிக்கப்பட்டுள்ளன. இதே வேளை அறுவடைக்கு தயாரான நிலையில் இருந்த கமார் நாலாயிரம் ஏக்கர் வயல் நிலங்களின் பயிரெய்கை அனைத்தும் கைவிடப்பட்டுள்ளதாகவும் தக வல்கள் தெரிவித்துள்ளன.

அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் பிரதேச சபைகளுடன் இணைந்து மக்களுக்கு குடிநீர் கூகாதார தேவைகளை நிறைவு செய்வதில் ஒருங்கிணைந்து செயலாற்றி வருகின்றன. இந்நிலையில் அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களுடன் கலந்துரையாடி மக்களுக்கு எத்தகைய உதவிகளை செய்யலாம் என்பது குறித்து நாங்கள் ஆலோசித்து வருவதாக முல்லைத்தீவு மாவட்ட அசாங்க அதிபர் எமில்டா சுகுமார் குறிப்பிட்டார்.

இடம்பெயரும் மக்களுக்கான உணவுப் பிரச்சினையை உலக உணவுத் திட்டம் மற்றும் பல நோக்கு கூட்டுறவு சங்கம் ஆகியவற்றின் உதவியுடன் ஓரளவுக்கு தீர்த்துவைக்கக் கூடிய நிலை காணப்படுவது ஆறுதலளிக்கும் விடயம். எனினும் இடம் பெயரும் மக்களுக்கு தற்காலிக வதிவிடங்களை அமைத்துக் கொடுப்பது என்பது பாரிய பிரச்சினையாக உள்ளது. மக்கள் இடம் பெயர்ந்து வரும்போது மர நிழலில்தான் தங்கவேண்டிய நிலையே நிலவுவதாகஅரச அதிபர் கவலை வெளியிட்டுள்ளார்

ICRC,OXFAM,CARE போன்ற நிறுவனங்கள் தம்மால் இயன்றளவு மனிதாபிமான உதவியை இடம்பெயரும் மக்களுக்கு வழங்கி வருகின்றன. பாதுகாப்புப்படையினர் நகர் வினை மேற்கொள்ளும்போது கூடுகலான எறிகணை தாக்குதல் கிராமங்களின் மீதே நடத்தப்படுகின்றன.

உங்கள் கதைகள்

மீண்டும் வாழ்வோம் வானொலி நிகழ்ச்சியில் உங்கள் கதைகள் இடம்பெறக் காத்திருக்கின்றன. ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் ஒவ்பிரப்பாகும் நாடகங்களின் தொகுப்பை மீண்டும் வாழ்வோம் பத்திரிகை வாயிலாகவும் உங்களுக்கு அறியத் தருகின்றோம். வடக்கு கிழக்குப்பகுதிகளில் இருந்து பல்வேறு காரணங்களால் இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்களுக்கு பெற்றோர் பராமரிப்பு பற்றி எடுத்துக் கூறும் வகையில் 'ஏணிகள்' குறு நாடகம் அமைந்தது. குறுநாடகத்தின் தொகுப்பு கீழே தரப்படுகின்றது.

ஏணிகள்

மீண்டும் வாழ்வோம் வானொலி நிகழ்ச்சியில் உங்கள் கதைகள் பகுதியில் அன்றாட வாழ்க்கையில் ஒவ்வொரு மனிதனும் அறிந்திருக்க வேண்டிய விடயங்களை மக்களுக்கு இலகுவாக சென்றடையக் கூடிய வகையில் சிறு சிறு சம்பவங்களாக நாடக வடிவில் தொகுத்து குறு நாடகங்களாக ஒலிபரப்புகின்றோம்.

அதனடிப்படையில் கடந்த வார நிகழ்ச்சியில் ஏணிகள் என்ற நாடகம் ஒலிபரப்பானது. வயோதிபர்கள் சமூகத்தில் எதிர் நோக்கும் பிரச்சினைகள் மையப்படுத்தியதாக இந்த நாடகம் அமைந்திருந்தது. குமார், வஹாத் இருவரும் கணவன் மனைவி. குமாரின் தந்தையார் இவர்களுடன் தான் இருக்கிறார். இவர்கள் இருவரும் வேலைக்குச் செல்பவர்கள். வீட்டு வேலைகள் வெளி வேலைகள் என்று அனைத்தையுமே தந்தையைக் கொண்டே செய்விக்கிறார்கள். வயதான நோ்தத்தில் மகனின் அரவணைப்புடன் தனது இறுதிக் காலத்தை கொண்டு செல்லலாம் என்று நினைத்த குமாரின் தந்தைக்கு மகனதும் மருமகனதும் செயற் பாடுகள் வேதனையைக் கொடுப்பதுடன் பெரிய மனத்தாக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது. தந்தையார் ககயீனமாக இருந்த நோ்தத்தில் கூட குமார் தந்தையை உரிய முறையில் கவனிக்கவில்லை. பதிலுக்கு மன சாட்சி இல்லாத தன்மையுடன் நடந்து கொள்கிறான். மகளிடம் தனக்கு மருந்து எடுத்துத் தரும் படி பல முறை கேட்டும் மகனும் மருமகளும் தனது உடல் நிலை பற்றி சற்றும் சிந்திக்காமல் வீட்டு வேலைக்கார னைப் போல நடத்துகிறார்கள் என்று நினைத்து மனமுடைந்து போகிறார்.

இவ்வாறு இருக்கையில் திடீரென்று குமாரின் தந்தைக்கு உடல் நிலை மோசமாக, தனக்காக பணம் செலவழித்து வைத்தியம் செய்ய முடியாவிட்டால் பரவாயில்லை தன்னை அரசாங்கங் வைத்தியசாலையில் சேர்த்து விடுமாறு மகளிடம் மன்வருத்தத்துடன் கூறுகிறார். இந்த சந்தர்ப்பத்தில் குமாருக்கும் தந்தைக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்படுகிறது. குமார் பெற்றவர்களுக்குரிய மரியாதையை கொடுக்கத் தவறியதை தந்தையார் சுட்டிக் காட்டினார். இந்த வீட்டில் ஒரு வேலைக்காரனாக என்னால் இருக்க முடியாது அதனால் நான் இங்கிருந்து வெளியே செல்லப் போகிறேன் என்று குமாரின் தந்தை மன முடைந்து கூறுகிறார்.

இவ்வாறு எத்தனையோ சம்பவங்கள் நடந்த வண்ணமே தான் இருக்கின்றன. பெற்றோர் பிள்ளைகளுக்கு பாதுகாப்பாக இருப்பதுபோல் அவர்களின் வயதான காலத்தில் பிள்ளைகள்தான் பெற்றோருக்கு பாதுகாப்பாக இருக்க வேண்டும். ஒவ்வொரு பிள்ளைகளும் பெற்றோரை அவர்களது இறுதிக்காலம் வரை அன்புடனும் அரவணைப்புடனும் பாதுகாப்புடனும் பார்த்துக் கொள்வதை தமது கடமையாக நினைக்க வேண்டும். இந்தக் கடமையில் இருந்து பிள்ளைகள் தவறுவதனால் தான் நாடளாவிய ரீதியில் முதியோர் இல்லங்களின் எண்ணிக்கை அதிகரித்து செல்கிறது. இந்த நிலைமை மாற வேண்டும் என்றால் ஒவ்வொரு பிள்ளைகளும் சிந்தித்து தமது பெற்றோரின் மனம் புண்படாதபடி நடந்து பெற்றோரின் ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ள வேண்டும் ஏணிகள் குறு நாடகம் இந்த விடயங்களை வெளிப்படுத்தி துலதாகவே அமைந்திருந்தது.

மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியில் உங்கள் கதைகள் பகுதிக்கு உங்கள் வாழ்க்கையில் இடம்பெற்ற சம்பவங்களை எழுதி அனுப்புங்கள். இவற்றை நாடக வடிவில் தொகுத்து உங்கள் கதைகளாக ஒலிபரப்பக் காத்திருக்கின்றோம். உங்கள் கதைகள் மற்றவர்களுக்கும் படிப்பினையாக அமையும் என்பதே மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியின் எதிர்பார்ப்பாகும்.

மீண்டும் வாழ்வோம் (LifeLine) செயல்திட்டமானது USAID இனால் நிதியளிக்கப்பட்டு Internews Network இனால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது

INTERNEWS USAID FROM THE AMERICAN PEOPLE

இப்பத்திரிகை சக்ல்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் (சிலோன்) லிமிட்டெட்டரால் கொழும்பு-14, கிராண்ட்பாஸ் வீதி, 185 ஆம் இலக்கத்தில் 2008ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.